# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 110/7 — 1980 ඔක්තෝබර් 15 වැනි බදාදා — 1980.10.15

110/7 ம் இலக்கம்—1980 ம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 15 ம் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I) — பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. வ.—பி. 21/78

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்***

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 25 ஆம் பிரிவின் கீழ், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச்சட்டம்.*

டபிள்யூ. எம். ஏ. விஜேரட்ண பண்டா,
செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

கொழும்பு,
ஒக்டோபர் 10, 1980.

### கட்டளைச்சட்டம்

1. இக்கட்டளைச்சட்டம், 1980 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க நிறுவனங்களின் அங்கீகாரக் கட்டளைச்சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன், 1980 ஆம் ஆண்டு ஒக்டோபர் ம[illegible] 15 ஆம் தேதியன்று வலுவிற்கு வருதலும் வேண்டும்.

2. (1) சட்டத்தின் 25 ஆம் பிரிவின்கீழ் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட உயர்கல்வி நிறுவனங்கள் தொடர்பில் அங்கிகாரத்தை நாடுகின்ற நிறுவனம் ஒன்றின் பிரதான நிருவாக அலுவலர், அத்தகைய உயர்கல்வி நிறுவனம் ஒவ்வொன்றின் தொடர்பிலும் இணைப்படியிலான விண்ணப்பம் ஒன்றினைச் செயலாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பந்தியில் குறிப்பிடுசெய்யப்பட்ட ஒவ்வொரு விண்ணப்பமும் செயலாளரினால் அந்நோக்கத்துக்கென வழங்கப்படும் படிவத்தில் செய்யப்படுதல் வேண்டும்.

3. (1) இரண்டாம் பந்தியின்கீழ் செய்யப்படும் ஒரு விண்ணப்பம் பெற்றுக்கொள்ளப்பட்ட பதினான்கு நாட்களுக்குள், செயலாளர், எந்த உயர்கல்வி நிறுவனம் தொடர்பாக அங்கிகாரம் நாடப்பட்டதோ அதன் பிரதான நிறைவேற்று அலுவலாளருக்கு அத்தகைய விண்ணப்பத்தின் ஒரு பிரதியை, அதன்மீது அத்தகைய உயர்கல்வி நிறுவனத்தின் விதப்புரைக்காக அனுப்புதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பந்தியில் குறிப்பிடுசெய்யப்பட்ட உயர்கல்வி நிறுவனமொன்றின் பிரதான நிறைவேற்று அலுவலர், அப்பந்தியின்கீழான விண்ணப்பமொன்றை தாம் பெற்றுக்கொண்ட அறுபது நாட்களுக்குள், அத்தகைய விண்ணப்பத்தின் மீதான அத்தகைய உயர்கல்வி நிறுவனத்தின் விதப்புரையைச் செயலாளருக்குத் தமது கைப்பட எழுத்தில் அறிவித்தல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பந்தியில் குறிப்பிடுசெய்யப்பட்ட விதப்புரை தம்மால் பெற்றுக்கொள்ளப்பட்டதன்மேல், 2 ஆம் பந்தியின்கீழ் தம்மால் பெறப்பட்ட விண்ணப்பத்தின் ஒரு பிரதியை, அதன்மீது 2 ஆம் உட்பந்தியின்கீழ் உயர்கல்வி நிறுவனத்தால் செய்யப்பட்ட விதப்புரையுடன், இயலுமானவரை விரைவில் செயலாளர் ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. (1) சட்டத்தின் 25 ஆம் பிரிவின்கீழ், அங்கிகாரத்தை நாடுகின்ற ஏதேனும் நிறுவனத்துக்கு அத்தகைய அங்கிகாரத்தை வழங்குவதா இல்லையா என்பதனைத் தீர்மானிக்கும் வகையில், ஆணைக்குழுவால் அவசியமெனக் கருதப்படுகின்றவாறான அத்தகைய பரிசோதனைகளையும் நுண்ணாய்வுகளையும் நடாத்தவும், நடாத்துவிப்பதற்கும், அத்துடன் அத்தகைய விபரங்களைக் கோரவும் ஆணைக்குழுவுக்கு முடியும்.

(2) ஓராம் உட்பந்தியின் நோக்கங்களுக்காக ஆணைக்குழுவால் அவசியமெனக் கருதப்படும் அத்தகைய பரிசோதனைகளுக்கும் நுண்ணாய்வுகளுக்குமென அத்தகைய வசதிகளை அளிப்பதும், அத்தகைய விபரங்களைக் கொடுப்பதும், அத்தகைய அங்கீகாரத்தை நாடுகின்ற நிறுவனம் ஒவ்வொன்றினதும் கடமையாதல் வேண்டும்.

5. (1) சட்டத்தின் 25 ஆம் பிரிவின்கீழ் ஏதேனும் நிறுவனத்தை அங்கீகரிப்பதா அல்லவா என்பதைத் தீர்மானிக்கும் நோக்கத்துக்காக, அத்தகைய நிறுவனத்தில் கிடைக்கப்பெறும் ஆகக் குறைந்த பின்வரும் வசதிகளை ஆணைக்குழு கவனத்தில் எடுத்துக் கொள்ளலாம் :—

(அ) அங்கிகாரத்தை நாடுகின்ற நிறுவனத்தால் வேலைக்கமர்த்தப்பட்ட கல்விசார் அல்லது கல்விசார்பற்ற பணியாட்டொகுதியும் அத்துடன் அத்தகைய கல்விசார் பணியாட்டொகுதியின் ஒவ்வொரு உறுப்பினரினதும் ஆகக் குறைந்த தகைமைகளும் ;

(ஆ) அத்தகைய நிறுவனத்தில் உள்ள வகுப்பறைகள், நூலகங்கள், ஆய்வுகூடங்கள், உபகரணங்கள் உட்படப் பௌதிக வளங்கள் ; அத்துடன்

(இ) அத்தகைய நிறுவனத்தால் பணியாட்டொகுதியினருக்கும் மாணவர்களுக்கும் வழங்கப்படும் நலவசதிகள் :

ஆயின், எவ்வாறுயினும், எந்நிறுவனமும், அங்கீகாரம் நாடப்பட்ட அந்நிறுவனம் தொடர்பில் உயர்கல்வி நிறுவனத்தின் விதப்புரையும், அமைச்சரின் ஒருப்பாடும் இல்லாமல் அங்கீகரிக்கப்படலாகாது.

6. (1) ஐந்தாம் பந்தியின்கீழ் ஏதேனும் நிறுவனத்தை அங்கீகரிப்பதா அல்லவா என்ற ஆணைக்குழுவின் முடிவு இறுதியானதாகவிருத்தல் வேண்டும் என்பதுடன் அதுபற்றி அத்தகைய நிறுவனத்துக்கு எழுத்தில் அறிவிக்கப்படுதலும் வேண்டும்; அங்கீகாரத்துக்கான விண்ணப்பம் ஒன்று நிராகரிக்கப்பட்டவிடத்து, அத்தகைய நிராகரிப்புக்கான காரணங்களை ஆணைக்குழு அறிவித்தலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பந்தியின்கீழ் அங்கீகாரத்திற்கான விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதான ஏதேனும் நிறுவனம், (1) ஆம் உட்பந்தியின்கீழ் ஆணைக்குழுவினால் கூறப்படும் காரணங்களைக் கவனத்திற் கொண்டு அத்தகைய வேறு ஒழுங்குகளை அல்லது மாறுதல்களைச் செய்தபின்னர், சட்டத்தின் 25 ஆம் பிரிவின்கீழ் அங்கீகாரத்திற்காக ஒரு விண்ணப்பத்தை மீளச் சமர்ப்பிக்கலாம்.

7. எந்நிறுவனத்துக்கு சட்டத்தின் 25 ஆம் பிரிவின்கீழ் அங்கீகாரம் வழங்கப்பட்டதோ அந்நிறுவனத்துக்கு, அத்தகைய அங்கீகாரம் வழங்கப்பட்டமைக்கு அமைவான நிபந்தனைகளையும் அத்துடன் அத்தகைய நிறுவனத்தின் பணியாட்டொகுதி உறுப்பினர்களுக்கும் மாணவர்களுக்கும் அத்தகைய நிபந்தனைகளைத் தெரியச் செய்யும் முறையையும் ஆணைக்குழு அறிவித்தலும் வேண்டும்.

8. (1) சட்டத்தின் 25 ஆம் பிரிவின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தினால் (இதனகத்துப்பின்னர் "அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்" எனக்குறிப்பீடுசெய்யப்படும்) ஏற்பாடுசெய்யப்பட்ட வசதிகள் பற்றி ஆணைக்குழு காலத்துக்குக் காலம் நுண்ணாய்வு செய்யலாம் அல்லது நுண்ணாய்வுசெய்விக்கலாம்; அத்துடன் அத்தகைய நுண்ணாய்வினைச் செய்வதற்கான ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் அளித்தல் அத்தகைய நிறுவனத்தின் கடமையாதல் வேண்டும்.

(2) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் ஏற்பாடுசெய்யப்பட்ட வசதிகளில் ஏதேனும் குறைபாடு உள்ளதென, (1) ஆம் பந்தியின்கீழ் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் நுண்ணாய்வினையொட்டி ஆணைக்குழு அபிப்பிராயப்படுமிடத்து, அத்தகைய குறைபாடு குறித்து அத்தகைய நிறுவனத்துக்கு ஆணைக்குழு அறிவிப்பதுடன், அத்தகைய குறைபாட்டினை நிவர்த்திக்கும்படி அத்தகைய நிறுவனத்தைப் பணித்தலும் வேண்டும்.

(3) ஏதேனும் குறைபாட்டினை நிவர்த்திப்பதற்கு (2) ஆம் உட்பந்தியின்கீழ் ஆணைக்குழுவினால் பணிக்கப்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் நிறுவனம், அவ்வாறு செய்வதற்கு நியாயமான காரணமில்லாமல் தவறுமிடத்து, சட்டத்தின் 25 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட அங்கீகாரத்தை அமைச்சரின் ஒருப்பாட்டுடன் ஆணைக்குழு மீளப்பெறலாம்.

9. (1) நிறுவனம் ஒவ்வொன்றும், அத்தகைய அங்கீகாரம் எந்த உயர்கல்வி நிறுவனம் குறித்து வழங்கப்பட்டதோ அதன் தேர்வுகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட கற்கைநெறிகளைப் பின்பற்றும் நோக்கத்துக்காக, பல்கலைக்கழக அனுமதிக்கென ஆணைக்குழுவினால் காலத்துக்குக் காலம் குறித்துரைக்கப்படும் ஆகக் குறைந்த தேவைகளைத் திருப்திசெய்யும் அத்தகைய மாணவர்களை மட்டும் அனுமதித்தல் வேண்டும்.

(2) சட்டத்தின் 30 ஆம், 31 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றுக்கும் அது தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

10. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒவ்வொன்றும், 9 ஆம் பந்தியின்கீழ் அதில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் ஒழுகலாற்றுக்குப் பொறுப்பாதல்வேண்டும் :

ஆயின், எவ்வாறுயினும், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினது மாணவர் எவரேனும், ஏதேனும் உயர்கல்வி நிறுவனத்தில் அங்கீகரிக்கப்பட்ட கற்கைநெறிகளிலோ அல்லது அதன் பகுதி எவற்றிலேனுமோ சேர்ந்து பயில அனுமதியளிக்கப்பட்டவிடத்து, அந்த மாணவர் அத்தகைய உயர்கல்வி நிறுவனத்தின் எல்லைக்குள் இருக்குமட்டும், அத்தகைய உயர்கல்வி நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அலுவலாளரின் ஒழுகலாற்றுக் கட்டுப்பாட்டின்கீழ் வருதல் வேண்டும்.

11. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒவ்வொன்றும் 9 ஆம் பந்தியின்கீழ் அனுமதிக்கப்பட்ட மாணவர்களிடமிருந்து தோதானதெனத் தான் கருதும் அத்தகைய கட்டணங்களை விதிக்கலாம் :

ஆயின் எவ்வாறுயினும், அரசாங்கத்தினால் முற்றிலுமோ பகுதியளவிலோ நிதியுதவி வழங்கப்படும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்று, அமைச்சரின் ஒருப்பாட்டுடன் வழங்கப்படும் ஆணைக்குழுவின் முன்னதான அங்கீகாரமின்றி எக்கட்டணத்தையும் விதித்தலாகாது.

12. அங்கீகாரமளிக்கப்பட்ட நிறுவனம் ஒவ்வொன்றும் எந்த உயர்கல்வி நிறுவனத்திற்கு அவ்வங்கீகாரம் வழங்கப்பட்டதோ, அதன் தேர்வுகளுக்கென அங்கீகரிக்கப்பட்ட கற்கைநெறிகளை, அத்தகைய கற்கைநெறிகளுக்காக அத்தகைய உயர்கல்வி நிறுவனத்தால் விதித்துரைக்கப்பட்ட பாடத்திட்டங்களுக்கு அமைய நடாத்துதல் வேண்டும்.

13. (1) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் எதுவும், அத்தகைய நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட அங்கீகாரம் எந்த உயர்கல்வி நிறுவனம் தொடர்பில் வழங்கப்பட்டதோ, அதன் ஒருப்பாட்டுடன், அங்கீகரிக்கப்பட்ட கற்கைநெறிகளிலோ அல்லது அவற்றின் பகுதிகள் எவற்றிலோ அத்தகைய நிறுவனத்தின் மாணவர்கள், அந்த நிறுவனத்திலோ அல்லது பிற உயர்கல்வி நிறுவனம் எதிலுமோ சேர்ந்து பயில்வதற்குத் தேவையான ஒழுங்குகளைச் செய்வதற்கு முடியும்; அத்துடன் அத்தகைய ஒழுங்குகளுக்கமையச் சேர்ந்து பயிலும் கற்கைநெறிகள் அல்லது அவற்றின் பகுதிகள் இக்கட்டளைச்சட்டத்தினதும் வேறு ஏதேனும் தோதான சாதனத்தினதும் நோக்கங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட அத்தகைய நிறுவனங்களிற் பயில்வதற்கென அங்கீகரிக்கப்பட்ட கற்கைநெறிகள் அல்லது அவற்றின் பகுதிகள் எனக் கருதப்படுதலும் வேண்டும்.

(2) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் மாணவர்கள் எந்த நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய (கட்டணம் தொடர்பானவை உட்பட), (1) ஆம் உட்பந்தியின் ஏற்பாடுகளின்கீழ், உயர்கல்வி நிறுவனமொன்றில், அங்கீகரிக்கப்பட்ட கற்கைநெறிகளையோ அல்லது அவற்றின் பகுதிகள் எவற்றையுமோ பின்பற்றக்கூடுமோ அந்த நியதிகளையும் நிபந்தனைகளையும் விதித்துரைத்தல் வேண்டும்.

14. அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தின் தகவுடைய மாணவர் ஒவ்வொருவரும் அங்கீகாரம் எந்த உயர்கல்வி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டதோ அந்த நிறுவனத்தின் தோதான பரீட்சைகளை எடுத்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய பரீட்சைகள், அத்தகைய உயர்கல்வி நிறுவனத்தின் தோதான ஏதேனும் சாதனத்துக்கு இணங்க நடாத்தப்படுதலும் வேண்டும்.

இப்பந்தியின் நோக்கத்துக்காக, "அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தின் தகவுடைய மாணவன்" என்பது :—

(1) ஒன்பதாம் பந்தியின் ஏற்பாடுகளின்கீழ் அத்தகைய நிறுவனத்துக்கு முறையாக அனுமதிக்கப்பட்டுள்ளவரான ;

(2) அத்தகைய நிறுவனத்தின் ஒரு மாணவனாகப் பதிவு செய்யப்பட்டுள்ளவரான ; அத்துடன்

(3) அதன்பின்னர், சம்பந்தப்பட்ட உயர்கல்வி நிறுவனத்தால் பரீட்சைக்கு விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குக் குறையாத காலப்பகுதியொன்றில் தான் எடுக்கக் கருதும் பரீட்சையின் அங்கீகரிக்கப்பட்ட கற்கைநெறிகளை அத்தகைய நிறுவனத்திற் பயின்றுள்ளவரான

மாணவன் எனப் பொருள்படும்.

15. இக்கட்டளைச்சட்டத்தில்—

"சட்டம்" என்பது, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம் எனப் பொருள்படும்;

"தோதான சாதனம்" என்பது, சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருக்கும்;

"அங்கீகரிக்கப்பட்ட கற்கைநெறிகள்" என்பது, அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் நிறுவனத்தினால் விதப்புரைக்கப்பட்டதும் அத்தகைய நிறுவனத்துக்கு அங்கீகாரமளித்த உயர் கல்வி நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்டதுமான கற்கை நெறிகளை உள்ளடக்கும்;

"ஆணைக்குழு" என்பது, சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருக்கும்;

"உயர்கல்வி நிறுவனம்" என்பது, சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருக்கும்;

"பிரதான நிறைவேற்று அலுவலர்" என்பது, சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருக்கும்; அத்துடன்

"செயலாளர்" என்பது, சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் செயலாளர் எனப் பொருள்படும்.

10-441

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது